வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 05.07.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது 5 நாடுகள் பயணத்தின் 3-ஆம் கட்டமாக அர்ஜென்டினா சென்றுள்ளார்.

நிறைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார்.

கோடிக்கணக்கான ஏழை எளிய மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தவே மத்திய கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

மொஹரம் பண்டிகையை கொண்டாடும் இஸ்லாமியர்களுக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து கூறி உள்ளார்.

*பிரதமர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது 5 நாடுகள் பயணத்தின் 3-ஆம் கட்டமாக அர்ஜென்டினா தலைநகர் **பியூனோஸ் அயர்ஸை** அடைந்தார். அர்ஜென்டினாவில் திரு மோடிக்கு இந்திய சமூகத்தினர் பாரம்பரிய நடன நிகழ்ச்சியுடன் அன்பான வரவேற்பு அளித்தனர்.

பிரதமரின் பயணத் திட்டம் குறித்த ஒரு செய்தி தொகுப்பு......

(வாய்ஸ்)

அர்ஜென்டினாவின் சுதந்திரப் போராட்ட வீரரும் தேசத் தலைவருமான ஜென்ரல் ஜோஸ் டி சான் மார்ட்டின் சிலைக்கு அஞ்சலி செலுத்தினார். பிரதமரின் இந்த பயணத்தின் போது இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீடு, சுகாதாரம், பாதுகாப்பு, பசுமை, எரிசக்தி, தகவல் தொடர்பு தொழில்நுட்பம், பேரிடர் மேலாண்மை, அறிவியல் தொழில் நுட்பம், கல்வி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபர் சேவியர் மிலே-வுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார். முன்னதாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிரேசிலில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி அர்ஜென்டினா அதிபர் சேவியர் மிலே-வை சந்தித்தது குறிப்பிடத் தக்கது.

அர்ஜென்டினா பயணத்தை முடித்துக் கொண்டு 4-ஆவது கட்டமாக பிரதமர் நாளை பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். அதனைத் தொடர்ந்து பிரதமர் நபீயாவிற்கு செல்ல உள்ளார்.

முன்னதாக டிரினிடாட், டொபேகோ நாடுகளுக்கான பயணத்தின் போது திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் கம்லா பெர்சத்துடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளை அடுத்து இருநாடுகளுக்கு இடையே 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பது குறிப்பிடத் தக்கது.

*தன்கர்*

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் 2 நாள் பயணமாக நாளை கேரளா மாநிலம் செல்கிறார். திருச்சூர் மாவட்டத்தில் உள்ள குருவாயூர் கோவிலில் வழிபட்ட பின்னர் கொச்சியில் உள்ள தேசிய மேம்பட்ட சட்டப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் திரு தன்கர் உரையாடுவார்.

*நிர்மலா சீதாராமன்*

நிறைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். ரியோடி ஜெனிரோ-வில் நடைபெற்ற மத்திய வங்கி ஆளுநர்கள் பங்கேற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் வளரும் நாடுகள் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் நிதி சார்ந்த சவால்களை எதிர்கொள்வதாக கூறினார். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் பிற வளரும் நாடுகளுக்கும் உதவிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். மக்களுக்கு வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வாழ்வாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்று என்றும் அவர் கூறினார். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் கதிசக்தி தேசிய பெருந்திட்டம் மற்றும் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் புதுப்பிக்க தக்க எரிசக்தி திறனை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

*எல் முருகன்*

நாட்டில் உள்ள சாதாரண மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகளை வழங்குவதில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மிகவும் பயன் தருவதாக உள்ளது என்று தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். இன்று கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் ஸ்ரீ உத்திராடம் திருநாள் மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் 14-ஆவது பட்டமளிப்பு விழாவை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் 387 மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 776-ஆக உயர்ந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்தியாவில் சுகாதார அமைப்பு சர்வதேச தரத்திற்கு இணையாக இருப்பதாகவும் டாக்டர் எல் முருகன் குறிப்பிட்டார்.

*அமர்நாத் யாத்திரை*

அமர்நாத் கோவிலுக்கு செல்லும் 6 ஆயிரத்து 979 யாத்திரிகர்கள் கொண்ட மற்றொரு குழு இன்று ஜம்மு-வில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது. இதில் 2-ஆயிரத்து 753 யாத்திரிகர்கள் அடங்கிய குழு பல்தால் முகாமில் இருந்தும் 4 ஆயிரத்து 226 யாத்திரிகர்கள் அடங்கிய குழு பகல்காம் பகுதியில் உள்ள நுவான் முகாமிலிருந்தும் புறப்பட்டுச் சென்றுள்ளனர். கடந்த 2 நாட்களில் 26 ஆயிரத்து 800-க்கும் மேற்பட்டோர் அமர்நாத் கோவிலுக்கு சென்று வழிபட்டுள்ளனர்.

இதனிடையே, அமர்நாத் யாத்திரையின் பகல்ஹாமில் இருந்து புறப்பட்ட யாத்திரிகர்களின் கடைசி வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பிற வாகனங்கள் மீது மோதியதில் 36 யாத்திரிகர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் ராம்பன் மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் யாத்திரிகள் தங்கள் பயணத்தை தொடங்க மாற்று வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.மேலும் யாத்திரையின் போது உணவு மற்றும் மருந்துகள் தடையின்றி கிடைக்கவும், பாதுகாப்பு குறித்தும் உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா உத்தரவிட்டுள்ளார்.

*நிஃபா-வைரஸ்*

கேரளாவின் பல்வேறு மாவட்டங்களில் நிஃபா வைரஸ் பரவி வருவதாகவும் இதன் காரணமாக கோழிக்கோடு, மலப்புரம், பாலக்காடு, மாவட்டங்களில் உஷார் நிலை அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அம்மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகள் அமல்படுத்தப் பட்டுள்ளதாகவும்

வைரஸ் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் மாவட்ட அளவிலான தடை செய்யப்பட்ட பகுதிகள், உதவி தொலைபேசி எண்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அம்மாநில சுகாதாரத் துறை அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ், கூறி

உள்ளார். இந்நிலையில் இந்த வைரஸ் தொற்று காரணமாக கோழிக்கோட்டைச் சேர்ந்த 18 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மலப்புரத்தைச் சேர்ந்த 38 வயது பெண் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாவட்டங்களில் கடந்த வாரத்தில் பதிவான இயற்கைக்கு மாறான மரணங்கள் குறித்தும் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

*மொஹரம்-வாழ்த்து*

மொஹரம் பண்டிகையை கொண்டாடும் இஸ்லாமியர்களுக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து கூறி உள்ளார்.

இஸ்லாமிய ஆண்டின் தொடக்கமாகவும் 4 புனித மாதங்களில் ஒன்றாகவும் கொண்டாடப்படும் சிறப்பு வாய்ந்த மொஹரம் மாதத்தில் அனைவரின் இதயங்களும் பொறுமையாலும், எண்ணத் தூய்மையாலும் கருணை, நீதி, மற்றும் அசைக்க முடியாத பக்தியால் நிரம்பட்டும் என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

*கூட்டுறவு நாள்*

1923-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதத்தின் முதல் சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை நாட்டின் சமூக பொருளாதார, வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதுபற்றிய ஒரு செய்தி தொகுப்பு............

(வாய்ஸ்)

*கூட்டுறவு நாள்*

(வாய்ஸ்)

இன்றைய உலகம் சமூக, பொருளாதார மாற்றங்களுடன் கூட்டுறவின் தேவையை உணர்ந்தே உள்ளது. நாடுகளிடையே கூட்டுறவு, மக்களிடையே கூட்டுறவு, மற்றும் கூட்டுணர்வு போன்ற எண்ணங்கள் சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவு கூர வாய்ப்பளித்துள்ளன. சர்வதேச கூட்டுறவு தினத்தை ஒட்டி மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா, குஜராத் மாநிலம் ஆனந்த்

நகரில் நாட்டின் முதலாவது கூட்டுறவு பல்கலைக்கழகத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசினார்.

நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சகம் 64 புதிய திட்டங்களை அறிமுகம் செய்துள்ளதாக தெரிவித்தார். கோடிக்கணக்கான ஏழை எளிய மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தவே மத்திய கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார். கூட்டுறவு இயக்கத்தின் கீழ் 40 லட்சம் தொழிலாளர்கள் இணைந்திருப்பதாக திரு அமித் ஷா மேலும் தெரிவித்தார். கொள்கையை உருவாக்குதல், தரவுகள் குறித்த ஆய்வு, கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் புதிய

கூட்டுறவு நாள்

ஆராய்ச்சிகளுக்கு கூட்டுறவு பல்கலைக் கழகம் வழிகோலும், என்றும் திரு அமித் ஷா எடுத்துரைத்தார். இத்தினத்தை ஒட்டி புதுச்சேரியில் கூட்டுறவு துறை சார்பில் நடைபெற்ற விழாவில் சங்க உறுப்பினர்களுடன் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்துரையாடினார். புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மீனவர் கூட்டுறவு சங்கம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான கடன் உதவிகளை துணை நிலை ஆளுநர் வழங்கினார். மேலும் தாயின் பெயரில் ஒரு மரம் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள் நட்டு சிறப்பாக செயல்பட்ட 2 பள்ளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். முன்னதாக திரு கைலாஷ்நாதன் கூட்டுறவுத் துறை செயல்பாடுகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், கூட்டுறவுத் துறை செயலர் திரு ஜெயந்த குமார் ரே, பதிவாளர் திரு யஷ்வந்த்தையா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியோடு, 2-ஆம் ஆண்டு புதுச்சேரி ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் நாளை மாலை 6.30 மணிக்கு துத்திப்பட்டில் உள்ள சீகெம் மைதானத்தில் தொடங்குகிறது. 27-ஆம் தேதி வரை லீக் போட்டிகள் பிற்பகல் 2 மணிக்கும், மாலை 6 மணிக்கும் நடைபெறும். இப்போட்டிகள் புகழ்பெற்ற தனியார் ஸ்போர்ட்ஸ் சேனலில் நேரடியாக ஒளிபரப்பபட உள்ளது. போட்டிகளை காண வரும் ரசிகர்களுக்காக நிர்வாகம் சார்பில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாண்டிச்சேரி கிரிக்கெட் அசோசியேசன் தலைவர் தெரிவித்துள்ளார்.

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை அடுத்த 7 தினங்களுக்கு பெய்யக் கூடும் என்றும், நீலகிரி, கோவை, மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவீத்துள்ளது. தென் தமிழக கடலோர, மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் நாளை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பியூஷ் கோயல்

2047-ஆம் ஆண்டிற்குள் நாட்டை 4 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தில் இருந்து 32 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் வகையில் இந்தியாவின் கொள்கைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார். பெங்களுருவில் இன்று நடைபெற்ற ஐஐடி மெட்ராசின் சங்கம் 2025 உலகளாவிய கண்டு பிடிப்பு மற்றும் முன்னாள் மாணவர் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார். இந்தியா தற்போது உலக அளவில் வேகமாக வளர்ந்து

வரும் பொருளாதார நாடுகளில் ஒன்று என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

8888888888

பெய்ஜிங்கில் நடைபெற்ற 2025 பாரா வில்வித்தை ஆசிய சாம்பியன் ஷிப் போட்டிகளில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றதை அடுத்து மொத்தபதக்க எண்ணிக்கை 7-ஆக உயர்ந்துள்ளது.